# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**Date : 03.11.2025**

**OS No. : 191/2021**

**Pw : 1**

**Name : திரு. மதார் மைதீன்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் அரசுப்பள்ளியில் ஆசிரியராக பணியாற்றினேன் என்றால் அரசு உதவி பெறும் பள்ளியில் பணியாற்றினேன். 2003ம் வருடம் நான் ஓய்வுபெற்றேன். நான் பணியில் இருக்கும்போதுதான் தபசில் வீடானது எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் அரசாங்கத்திடம் முறையான அனுமதியை எங்கள் துறை வாரியாக பெறவேண்டுமென்றால் அதுபற்றி எனக்கு தெரியாது- எனது மருமகன் நாகூர்மீரான், 1991 முதல் 1995 வரை தமிழக அமைச்சராக இருந்தார் என்றால் சரிதான். எனது மருமகன் அமைச்சராக இருந்த காலக்கட்டத்தில்தான் தபசில் வீட்டை ஒதுக்கீடு செய்து எனக்கு பெற்றுத்தந்தார் என்றால் சரிதான். எனது மருமகன் கடந்த 2017 ல் காலமானார்.

தபசில் வீட்டிற்குரிய தவணைக்கட்டணத்தை 1997 வரை நான் செலுத்தினேன் என்பதை காட்டுவதற்குரிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1997 வரை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு நான் எந்த தவணையும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. அந்த காலக்கட்டத்தில் நான் வருமான வரி கணக்கு அறிக்கையை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வீட்டிற்குரிய தவணைத்தொகையை செலுத்திய விவரங்கள் மேற்படி வருமான வரி கணக்கு அறிக்கையில் துலங்குமா என்றால் துலங்காது. நான் எந்த தொகையும் செலுத்தாத காரணத்தினால்தான் அந்த விவரங்கள் வருமான வரி அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. 1997 வரை நான் எவ்வளவு தொகையை தவணையாக செலுத்தினேன் என்றால் ரூ.1,98,000/-

செலுத்தியுள்ளேன். நான் எந்த தொகையும் செலுத்தவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வீடு எனக்கு 1993 ம் வருடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. நான் 1997 வரை மேற்படி வீட்டின் சாவியை வீட்டு வசதி வாரியத்திடம் இருந்து பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

1994 லிலிருந்து 1998 வரை நான் வீட்டு வசதி வாரியத்திற்கு தவணை செலுத்தாமல் வீட்டு சாவியையும் பெறாமல் இருந்த காரணத்தினால் எனக்கு பல்வேறு முறை நோட்டீஸ் அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. 1998 ல் சாவியை வாங்கிக்கொண்டு 2001 வரை வீட்டில் குடியேறாமல் யாரையும் வாடகைக்கும் அமர்த்தாமல் வீட்டை பூட்டி வைத்திருந்தேன் என்று சொன்னால் சரிதான். நான் வீட்டை பூட்டி வைத்திருந்த காரணத்தினால் வீட்டின் கதவு, ஜன்னல்கள் அனைத்தும் கரையான்கள் அரித்து வீடு பயன்படுத்த முடியாத நிலையில் சிதிலமடைந்திருந்தது என்று சொன்னால் சரியல்ல. எனது மருமகன் நாகூர் மீரான் முன்னிலையில்தான் பிரதிவாதிக்கு வீட்டின் சாவியை ஒப்படைத்தேன் என்றால் எனது மருமகன் கூறியதன்பேரில் ஒப்படைத்தேன். எனது மருமகன் முன்னிலையிலும், சாட்சிகளின் முன்னிலையிலும் வாய்மொழியாக கிரையம் பேசப்பட்டு ரூ.1,50,000/- எனக்கு கொடுக்கப்பட்டு மீதி தவணையை பிரதிவாதியே செலுத்தி கடனை அடைக்கவேண்டும் என ஒப்புக்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. கடன் தொகையை முழுவதும் செலுத்திய பின்னர் வீட்டு வசதி வாரியத்திலிருந்து அசல் பத்திரத்தை பெற்ற பின்னர் நான் பிரதிவாதிக்கு கிரைய ஆவணம் எழுதி தருவதாக பேசி முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதன் காரணமாக பிரதிவாதி 11 லட்ச ரூபாய் செலவு செய்து வீட்டை புனரமைத்து வீட்டில் குடியேறினார் என்று சொன்னால் சரியல்ல. அந்த வீட்டிற்கு போர் போட்டது, குடிநீர் குழாய் இணைப்பு பெற்றது அனைத்தும் பிரதிவாதிதான் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது, நான் அந்த வீட்டிற்கு சென்றதில்லை.

நான் பணம் பெற்றுக்கொண்டுதான் கிரையமாக மேற்படி வீட்டை பிரதிவாதியிடம் ஒப்படைத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எப்போது பிரதிவாதியிடம் வீட்டை காலி செய்ய சொன்னேன் என்ற விவரம் தற்போது எனக்கு நினைவில்லை. நான் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தபசில் வீடு என்னுடையது என்பதால் தபசில் வீட்டை என்னிடம் ஒப்படைக்கவேண்டும் என கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வேறு பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் அதுபற்றி

எனக்கு நினைவில்லை. பிரதிவாதி ரூ.11 லட்சம் செலவு செய்து வீட்டை புனரமைத்துள்ள காரணத்தினாலும், கிரையத்தை முன்னிட்டு நான் ஒன்றரை லட்ச ரூபாய் ஏற்கெனவே பெற்றுக்கொண்டுள்ள காரணத்தினாலும், பிரதிவாதியிடம் நான் mesne profit கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் கூறியவாறு, வீட்டு வசதி வாரியத்திற்கு எந்த தொகையும் செலுத்தவில்லை என்றும், அதனால்தான் என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சாட்சிகளின் முன்னிலையில் பிரதிவாதியுடன் கிரையம் பேசியபடி வீட்டை அவருக்கு ஒப்படைக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பேசியபடி நடந்துகொள்ளாமல் தற்போது வீண் வம்பு கட்சி செய்வதால் பிரதிவாதிக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும், நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi